**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 11/2022 PW . 3**

**பெயர் : கண்ணன்** **தந்தை/கணவர் பெயர்: சண்முகம்**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்:**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025

---

**(எதிரி ஆஜர்).**

**17.07.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது மணவாக்கிபட்டியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 11ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2020-2021ம் வருடம் ஒரு நாள் நான் எஸ்எஸ்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்றிருந்த போது எதிரி காவல்நிலையத்தில் இருந்தார். அப்போது அங்கிருந்த சார்பு ஆய்வாளர் நடராஜன் என்பவர் வழக்கு சம்பந்தமாக கையொப்பம் செய்ய சொன்னதால் கையொப்பம் செய்தேன். எது சம்பந்தமான வழக்கு என்றால்அடிதடி வழக்கு என்று சொன்னார்கள். மற்ற விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. **அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2. 20.09.2021ம்தேதி எஸ்எஸ்கோட்டை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த போது ரகசிய தகவலின் அடிப்படையில் எருமைப்பட்டி விலக்கு பேருந்து நிறுத்தத்திற்கு சென்று அங்கிருந்த எதிரியை அடையாளம் காண்பித்து காலை 10 மணிக்கு காரணம் கூறி கைது செய்து அவ்வழியாக வந்த என்முன்னிலையிலும், சாட்சி அய்யனார் என்பவர் முன்னிலையிலும் எதிரியை விசாரித்த போது அவர் கொடுத்த வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும் எதிரி இவ்வழக்கின் குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டு செல்போனை பயன்படுத்தினால் போலீஸ் கண்டுப்பிடித்துவிடுவார்கள் என்று எண்ணி போனை பயன்படுத்தாமல் அதை சுவிட்ச் ஆப் செய்து வைத்திருந்தேன் என ஒப்புதல் வாக்குமூலம்கொடுத்திருந்தார் என்றால்சரியல்ல. எதிரி எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். எதிரி பழக்கமானவர் என்பதால் கைது செய்த இடத்தில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**